இலங்கை

# குடியரசு மலர்



தான்

வெளியீடு:

காங்கேசன்துறைத்தொகுதி அபிவிருத்திச் சபை

In the .. .. Ceylonese

tradition...

Architects in the past built marvels like the Brazen Palace

Engineers today build modern industry using local resources.

From paddy straw and waste paper the finest quality paper is produced by Eastern Paper Mills.

**Eastern Paper Mills Corporation**

**356, Union Place, Colombo 2.**

Phone: 25325 — 25328

# இலங்கை
# குடியரசு
# மலர்.

A. KUMARATHASAN
BALAIMAGAL ROAD
ANNAMALAI WEST
CHENA

*இதழாசிரியர்:* நாக. சிறீ கெங்காதரன்
வி. சிவலிங்கம்

*சிறப்பாசிரியர்:* வ. பொன்னம்பலம் எம். ஏ.

காங்கேசன்துறை
தொகுதி
அபிவிருத்தி சபை
வெளியீடு
24 - 5 - 1972

# காங்கேசன்துறைத் தொகுதி அபிவிருத்திச்சபை

**காப்பாளர் :**

மாண்புமிகு
ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா

மாண்புமிகு, கலாநிதி என். எம். பெரேரா

மாண்புமிகு,
கலாநிதி என். ஏ. விக்கிரமசிங்க

**தலைவர் :**

வி. பொன்னம்பலம் எம். ஏ.

**உப தலைவர் :**

கே. ஜயபாலசிங்கம்
எம். சிதம்பரநாதன்
கே. ரி. இராசதுரை
எஸ். எஸ். கனகசபாபதி
என். பி. இராசநாயகம்

**செயலாளர் :**

நாக. சிறீ கெங்காதரன்

**நிர்வாகச் செயலாளர் :**

கே. சிவசுப்பிரமணியம் பி. ஏ.

**பொருளாளர் :**

வி. சிவலிங்கம்
டாக்டர் எஸ். அல்பிரட்

**உதவிப் பொருளாளர் :**

எஸ். சுந்தரலிங்கம்


ஓம்

''எல்லோரும் இன்புற் றிருக்கவென் றெண்ணுவதே
அல்லால்மற் றொன்றும் அறியேன் பராபரமே'' -- தாயுமானவர்

அன்பர்கள், ஆதரவாளர்கள், விற்பனையாளர்கள்,
பாவிப்பாளர்கள் அனைவருக்கும்
எமது உளம் கனிந்த

**நல் வாழ்த்துக்களை**

தெரிவித்துக்கொள்கின்றோம்.




நாடு நலம் பெற, நாம் நற்சேவை செய்ய
எமது உற்பத்திப் பொருள்களை
வாங்கி உபயோகியுங்கள்.

வணக்கம்

அதிபர், **மில்க்வைற் சோப் தொழிற்சாலை**

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233 தந்தி: ''மில்க்வைற்''

கிளை: 79, மெசஞ்ஜர் வீதி, கொழும்பு - 12 தொலைபேசி: 35063

ஆசிரியர் தலையங்கம்

# இறைமை முழுமை உறும் நன்னாள்

1972 மேமாதம் இருபத்திரண்டாம் நாள் இலங்கை வரலாற்றில் முழுமை பெற்ற நாளாகக் கொண்டாடப்படும். அன்றுதான் பொது நல வாய நாடாக பிரித்தானிய முடிமை மேலாதிக்கம் செலுத்தும் சின்னமாக அங்கீகரித்த நிலையிலிருந்து இலங்கை முழுமையாக விடுதலை பெறும் திருநாள். 450 ஆண்டுகளுக்கு முன்னம் ஆரம்பித்த அந்நிய மேலாதிக்கம் முறையே போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், கைகளுக்கு மாறிச் சில நாட்களுக்கு பிரஞ்சுக்காரர், பின்பு ஆங்கிலக் குடியேற்றநாடாக 1802 முதல் 1948 வரை நிலைபெற்றிருந்தது. 1948 இல் கிடைத்த அரசியற் கைமாற்றம் இலங்கை விடுதலையின் ஆரம்பமே. எனினும் திருகோணமலை யுத்ததளமும், கட்டுநாயக்கா இறங்குதுறையும், தொடர்ந்தும் பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் அங்கம்தான், இலங்கை என்பதை 1956 வரை நினைவுறுத்தும் வகையில் ஆங்கில ஏகாதிபத்தியக் கொடிகள் இங்கு பறந்து கொண்டே இருந்தன. இந்தத் தளங்களில் இருந்து அந்நியரை அகற்ற, இலங்கையின் விடுதலையை முழுமையுறச் செய்ய இலங்கையின் தொழிற்சங்கங்களும் இடதுசாரிக் கட்சிகளும் அரசியல் பேரியக்கங்களும் 1930 முதல் ஆங்கில எதிர்ப்பு இயக்கங்களை ஆரம்பித்து நடத்தி வந்தன. விடுதலை வேண்டி நின்ற ஈழத்தின் தலைசிறந்த தேசபக்தர் சேர். பொன் அருணாசலத்தை ஒரு போல்சிவிக் (கம்யூனிஸ்ட்) என்று 1919-ல் ஆட்சிபுரிந்த ஆங்கில ஆள்பதி பகிரங்கமாகக் குற்றம் சுமத்தினார். இதற்குப் பதில் கூறிய தேசபக்தர் சேர். பொன். அருணாசலம் '' போல்சிவிசம் என்பது என்ன என்று புரியவில்லை. ஆனால் எனது தாய்த்திருநாட்டுக்கு விடுதலை வேண்டுவதனால்தான் என்னைப் போல்சிவிக் என்று அந்நிய ஆள்பதி வர்ணிக்கிறார் என்றால் நான் ஒரு போல்சிவிக் என்று பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன் '' என்று தேசாபிமானம் கொழுந்துவிட்டெரியும்படி ஆங்கில மிலேச்சத்தனத்துக்கு சாட்டை அடிகொடுத்தார். அத்தகைய தேசபக்தர் பரம்பரையில் வந்துதித்தவர்தான் தமது இன்னுயிரை, ஈழநாட்டின் அரசியல் பரிபீடத்தில் அர்ப்பணித்த தேசபக்தர் திரு. S. W. R. D. பண்டாரநாயக்கா அவர்.

அவருடைய ஆட்சியின் கீழ்த்தான் எமது தாய்த்திருநாட்டில் பறந்து கொண்டிருந்த அந்நியக் கொடிகள் வரலாற்றுப் பெட்டகத்தில் எதிர்காலச் சந்ததியினர் கண்டுகளிக்கும் காட்சிப்பொருளாக மாற்றப்பட்டது. அந்தவேளையிற்கூட எம்மவர் மத்தியில் வாழ்ந்த ஏகாதிபத்திய தாசர்கள் சிலர் ஆங்கில அரசிக்கு தளங்களை விட்டகல வேண்டாம் என்று வேண்டுகோள் விடுக்கும் தந்திகள் பல அனுப்பிவைத்தனர். அண்ணல் அருணசலம் பிறந்த அதேமண்ணில்தான் அதே இனத்தில்தான் இத்தகைய பிரித்தானிய பக்தர்கள் அன்றும் வாழ்ந்தார்கள், இன்றும் சிலர் வாழ்ந்து வருகிறார்கள், என்பது அருவருக்கத்தக்க உண்மையாகும்.

ஈழநாட்டில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக நிலைபெற்று இயங்கிவந்த அரசியற் கட்சிகள் இலங்கையை ஓர் சுதந்திரச் சோஷலிசக் குடியரசாகக் காண வேண்டும் என்று ஆர்வம் கொண்டு அரசியல் இயக்கங்களை நடத்திவந்தன. அதற்கு முழுவடிவம் தரும் வகையில் கௌரவ பிரதமமந்திரியாக இன்று பதவியிலிருக்கும் **ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா** அம்மையாரை முதல்வராகக் கொண்ட சிறீலங்கா - சமசமாஜ - கம்யூனிஸ்ட்கட்சிகளின் கூட்டணித்தேர்தல் பிரகடனமாகவும் பின்பு ஐக்கியமுன்னணி அரசின் அரசியல் திட்டமாகவும், அரசியல் நிர்ணயசபையை அமைத்து இலங்கையைச் சோஷலிஸ ஜனநாயகத்தை நோக்கி முன்னேற்றவல்ல ஓர் மக்களரசாக, குடியரசாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இந்நிலை இலங்கையின் ஆதிபத்திய உரிமையை - இறைமையை உள்நாட்டிலும், வெளி நாட்டுத்துறையிலும் முழுமைப்படுத்தியுள்ளது! பெற்ற சுதந்திரத்தைப் பேணிவளர்த்திட அரசியல் விடுதலையை அர்த்தமுள்ளதாக்க இந்நாட்டின் உழைக்கும் மக்களுக்கு வாழ்க்கை வசதிகளைப் பெற்றுத்தர வல்லதாக சோஷலிஸக் குடியரசாக இது வளரட்டும். மனிதனை மனிதன் சுரண்டிவாழும் முறைக்கு முடிவுகட்டிப் பொருளாதார விடிவை ஏற்படுத்தி சகலவித ஆதிக்கங்களும் அடக்குமுறைகளும் ஒதுக்கல்களும் முற்றாகத் துடைத்தெறியப்படட்டும். நாம்பெற்ற குடியரசு அந்தஸ்து மக்களுக்கு உணவாக உடையாக, கல்வியாக, வீடாக, தொழிலாக வாழ்க்கை வசதிகளாகப் பரிணமிக்கட்டும். அரசியல் சுதந்திர அந்தஸ்து மாற்றம் குடிமக்களுக்கு வாழ்க்கைத்தர உயர்வாக அமையும்போதுதான் அர்த்தமுள்ளதாகிறது. இந்நிலைக்கு நாட்டுமக்கள் முன்னேறும்போதுதான் " நாட்டுயிர் நம்முயிரே, நம்முயிர் நாட்டுயிரே, நாட்டுயிர் வாழ்ந்திடவே நம்முயிர் ஈந்திடுவோம், " என்ற தேசபக்தி சுடர்விட்டு எரிய முடியும். அந்த உன்னத நிலைக்கு அன்னை நாட்டை வழிநடத்திச் செல்ல வாழ்வு பெற அனைவரும் அணி திரள்வோம். ●



## பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா

## அவர்களின் செய்தி

இன்று நம் நாட்டு மக்கள் புதிய சகாப்தம் காண, புதிய வரலாறு படைக்க புதிய நுழை வாயிலின் கதவை திறக்கின்றார்கள். இந் நன்னாள் ஏகாதிபத்திய, முதலாளித்துவ பிற்போக்கு சக்திகளின் கதவை அடைக்கின்ற நாளாகும். நாம் படைக்கும் புதிய அரசியல் அமைப்பு ஈழம் வாழ் மக்களுக்கு புதிய வரலாறு படைக்கட்டும். நாம் அறிமுகப் படுத்திய ஐந்தாண்டு திட்டம் இன்று நம் நாட்டில் மலிந்துள்ள சமூக, பொருளாதார, வேலையில்லா திண்டாட்ட நெருக்கடிகள் தீர வழிவகுக்கும். எனவே எமது திட்டம் வெற்றிபெற நாட்டின் சகல மக்களையும் இன, மத, மொழி வேறுபாடின்றி உழைக்கு மாறு வேண்டுகிறேன்.

நம்நாடு தன்னிறைமையுள்ள தன்னாதிக்க சுதந்திர குடியரசாக மாறும் இவ்வேளையில் நாட்டின் எல்லா மக்களும் சிறப்புற வாழ வாழ்த்துகிறேன்.

வணக்கம்.

" குடியரசு "
தினம் சரித்திரத்தில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ
" குமாரசாமி "
புடவை மாளிகையும் மக்கள் மனதில் அதி முக்கியத்துவம் பெற்றது
உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய
இன்றே விஜயம் செய்யுங்கள்

த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

போன்: 7034

பெரியகடை
யாழ்ப்பாணம்

அன்பளிப்பு

பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம்

அளவெட்டி - மல்லாகம்

போன்: சுன்னாகம் 201

அன்பளிப்பு

ஆனந்தா அச்சகம்

ஆனந்தா திருக்குறட் கலண்டர்களும் நாட் குறிப்புகளும்
தயாரிப்பாளர்கள்

226, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 348



### இலங்கை சமசமாஜக் கட்சியின் தலைவரும்

### நிதி அமைச்சருமான

## தோழர்,

## கலாநிதி என். எம். பெரேரா

## வாழ்த்துரை

அந்நிய ஏகாதிபத்தியத்தை எம் தாய்த்திரு நாட்டினின்றும் துடைத்தெறிய, சென்ற கால் நூற்றுண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து நடாத்திய, நடாத்தி வருகின்ற எமது போராட்டத்தின் வெற்றிகரமான கட்டம் இன்றைய ''குடியரசு'' நிகழ்ச்சி.

நமது தேசிய சுயாதிபத்தியத்தியத்தைப் பலப்படுத்தவும் பொருளாதார சமூக முன்னேற்றத்தை ஊக்குவிக்கவும் இன்றைய சம்பவத்தை முன்நிகழ்ச்சியாகக்கொண்டு நாம் சோஷலிஸ இலங்கைக் குடியரசைக் கட்டிவளர்ப்போம்.

இலங்கை குடியரசு வளர்க! அதன் இலட்சியங்கள் வாழ்க!

---

### தெல்லிப்பழை கிராம சபைத் தலைவர்

## வழக்கறிஞர் ம. சிதம்பரநாதன்

அவர்களின்

## வாழ்த்துரை

கடந்த கால் நூற்றுண்டுக்கு மேற்பட்ட, ஈழத்து முற்போக்கு இயக்கத்தின் இடையறுத போராட்டத்தின் வெற்றிதான் ''இலங்கை குடியரசின்'' உதயமாகும். இன்று ஆக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கும் அரசியல் யாப்பு நாம் விரும்புகின்ற அளவிற்கு முழுமையானதாக இல்லாவிட்டாலுங்கூட தொடர்ந்தும் நாம் மேற்கொள்ளுகின்ற போராட்டமே அரசியல் யாப்பை முழுமையான வடிவில் ஆக்கத்தக்க நிலையை உருவாக்கவும், இலங்கையை தன்னிறைவு பெற்ற சோஷலிஸக் குடியரசாக காணவும் வழிவகுக்கும் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

காங்கேசன்துறைத் தொகுதியின் ஆக்க வேலைகளில் முழுமையாகப் பங்குபற்றி வழிகாட்டி வரும் அபிவிருத்திச் சபையின் முயற்சிகள் வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

இலங்கைக் குடியரசு வாழ்க!

காங்கேசன்துறைத் தொகுதி அபிவிருத்திச் சபை வாழ்க!



தபால் தந்தி தொடர்புகள் அமைச்சர்

## திரு. செ. குமாரசூரியர் M. P. வாழ்த்துரை

சரித்திரப் புகழ்மிக்க இந் நிகழ்ச்சியை தமிழ் மக்களின் மத்தியில் கொண்டாடுகின்ற பெருமை பெற்ற இச் சபையை வாழ்த்துகின்றேன். காலம் சென்ற திரு. S.W. R.D. பண்டாரநாயக்காவின் இலட்சியங்களில் ஒன்று நிறைவேறுகின்ற இந்நாளில் ஏனைய இலட்சியங்களும் நிறைவேற — வெற்றிபெற உழைக்கும் முயற்சியை ஆரம்பிப்போம். சபையின் பணிகள் வெற்றிபெற எனது ஒத்துழைப்பை என்றும் தரக் காத்திருக்கின்றேன்.

குடியரசு இலங்கை வாழ்க !

அதன் இலட்சியங்கள் வெல்க !

---

காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர்

## திரு. க. ஜெயபாலசிங்கம் வாழ்த்துகிறார்

— o —

இலங்கை குடியரசாக மாறுகின்ற நிகழ்ச்சி சரித்திரத்தில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படவேண்டிய நிகழ்ச்சி. இம் மாற்றம், நாம் விரும்புகின்ற ‘‘நவீன இலங்கை’’யை உருவாக்கும் பணியில் முதற்படியாக விளங்கட்டும்.

மலர் சிறப்புற, விழா வெற்றிபெற, சபை வளர

வாழ்த்துகின்றேன்.

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின்

பொதுச் செயலாளரும்

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான

# தோழர் பீட்டர் கெனமன்

## வாழ்த்துகிறார்.



அந்நிய ஏகாதிபத்தியத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் எதிரான, முற்போக்கணியின் நீண்ட நெடுங்காலப் போராட்டத்தின் சிறந்த பெறுபேருக மலர்வது இன்றைய குடியரசு.

இலங்கை மக்களின் சகல பிரச்சனைகளையும் இந்நாட்டு தேசிய சிறுபான்மை இனத்தின் சகல பிரச்சனைகளையும் நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு, முற்போக்கு இயக்கத்துடன் கைகோர்த்து செல்வோம்! அதன் பெறுபேருக தன்னிறைவு பெற்ற சோஷலிஸக்குடியரசாக இலங்கையைக் காண்போம்.

இலங்கை குடியரசு வாழ்க!

---

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி

## காங்கேசன்துறைத் தொகுதி அமைப்பாளர்

திரு. த. பூ. முருகையா

## வாழ்த்துகிறார்

ஸ்ரீலங்காக் குடியரசில் இலங்கை பூரண அரசியல் சுதந்திரம் பெறுகிறது.

இந்நாட்டில் உள்ள மக்களில் பத்துவீதமானோர் சகல சௌகரியங்களையும் பெற்று வாழ, தொண்ணூறு வீதமானோர் அடிப்படைத் தேவைகளையே பெறமுடியாதவர்களாக இருக்கின்றனர். எல்லா மக்களுக்கும் அரசு, உணவு, உடை, இருப்பிடம், கல்வி, சுகாதாரம், தொழில் ஆகிய ஆறு அடிப்படைத் தேவைகளையும் பெற்றுக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளது. இவற்றை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டிய அரசியல் சுதந்திரத்தை இத்தினத்தில் அரசு பெறுகிறது.

முற்போக்கு எண்ணங்கொண்ட சகல இன, மத மக்களும், மிகமகிழ்ச்சியுடன் இத்தினத்தில் ஸ்ரீலங்காவின் பொருளாதார சுதந்திரத்தை மிக விரைவில் பெற உறுதி கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

மக்களிடம், இத்தினம் பற்றிய முக்கியத்துவத்தை ஏற்படுத்தும் நோக்கத்தோடு, இம்மலரை வெளியிடும், காங்கேசன்துறை தொகுதி அபிவிருத்திச் சபையினருக்கு எனது உளங்கனிந்த பாராட்டுக்கள்!

# அரசமைப்பு பற்றி.....

எஸ், அருளம்பலம் பா. உ. நல்லூர்

நம்நாடு சுதந்திரம் அடைந்தபோது பணக்காரர்களுக்கு மட்டும் தான் சுதந்திரம் கிடைத்ததே தவிர நாட்டு மக்கள் அனைவருக்கும் சுதந்திரம் கிடைக்கவில்லை. 1946-ம் ஆண்டிலேயே மொழிப் பிரச்சினை தொடங்கிவிட்டது. அக்காலத்தில் இருந்த அரசியல் சபையில் இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்க வேண்டுமென்ற தீர்மானத்தை திரு. பண்டாரநாயக்கா கொண்டிருந்தார். ஆனால் அந்த எண்ணம் நிறைவேறவில்லை.

இன்று நம்முன் வைக்கப்பட்டிருக்கும் அரசமைப்பைக்கொண்டு பலர் பலவிதமாக எடுத்துரைக்கலாம். இந்த நாட்டில் வடக்கு கிழக்கு மட்டுமல்ல. நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பல இலட்சம் தமிழ் மக்கள் வசிக்கின்றார்கள். இந்த நாட்டிலுள்ள சிங்கள தமிழ் மக்கள் ஒரு இனத்தவரது மொழியை மற்ற இனத்தவர் படிக்க முன்வரவேண்டும். அப்போதுதான் இந்த நாட்டில் உண்மையான ஒரு ஐக்கிய நிலை உருவாகும்.

இந்த அரசாங்கம் தொடர்ந்தும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சி. எக்ஸ். மார்டின் பா. உ. யாழ்ப்பாணம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் புதிய அரசமைப்பு முக்கியமான உரிமைகள் பலவற்றை தமிழ்மக்களுக்கு வழங்கவில்லை என நான் கருதுகின்றேன். இருப்பினும் இவற்றைப் பற்றி இரு சமூகத்தினரும் கலந்துபேசி தீர்த்துக்கொள்ளலாம் என நான் கருதுகின்றேன். இதன்மூலம் தான் இந்தநாட்டில் வாழும் சிங்கள தமிழ் சமூகங்களுக்கிடையில் நிரந்தர நல்லெண்ணத்தையும் அமைதியான சூழ் நிலையையும் உருவாக்க முடியும். எனவே நாம் அதற்கான ஆக்கவேலைகளில் முன்னின்று உழைப்போமாக.

[11-5-72 தினபதி]

துணைத் தகவல் ஒலிபரப்பு அமைச்சரும்
மூதூர்த் தொகுதி முதல்வருமான

## ஜனாப் A. L. A. மஜீத் M. P. வாழ்த்து



மக்கள் அரசாங்கத்தின் முயற்சியினால் உருவாகும் சட்டதிட்டம் நம் நாட்டின் பாரம்பரிய பண்பாட்டை எடுத்துக்காட்டும் அரசியல் நிறுவனமாக அமைவதை நாம் உணராமல் இருக்க முடியாது. முதலாளித்துவ ஏகாதிபத்திய வெறி பிடித்த வர்க்கத்தினரால் உருவாக்கப்பட்ட அந்நிய வாழ்வுமுறை மாற்றப்படுவதோடு இந்த நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் மத்தியில் உள்ள முற்போக்கு வாதிகள் ஒன்று சேர்ந்து சாதி, மத, வர்க்க பேதமற்ற ஒரு சோஷலிஸ அமைப்பை காண முனையும் இவ்வேளையில் நாம் உருவாக்கிய குடியரசுத் திட்டம் நன்றாக அமைவதையிட்டு நாம் களிப்படையாமல் இருக்கமுடியாது.

சோஷலிஸ சமூகம் காண உழைக்கும் ஆக்க எழுச்சியுள்ள வாலிபத் தோழர்களை அவர்களின் முயற்சியின் பிரவசமாக மலரும், ''இலங்கை குடியரசு மலரை'' வாழ்த்தாமல் பாராட்டாமல் இருக்க முடியாது.

---

காங்கேசன்துறைத் தொகுதி
முதல் இடதுசாரி வேட்பாளரும்
சுன்னாகம் பட்டினசபைத் தலைவருமான
திரு. பொ. நாகலிங்கம் அவர்களின்

## வாழ்த்து

கால் நூற்றாண்டுகளுக்கு முன்பாக இன்று அமைச்சரவையை அலங்கரிக்கும் தோழர்கள் தலைமை தாங்கி நடாத்திய போராட்டத்தின் நல்ல கட்டம் அவர்களின் காலத்திலேயே உருவாவது அபூர்வ நிகழ்ச்சியே. நாம் கூறியவைகளைச் செயலில் காட்டி பூரணத்துவம் பெற்ற சோசலிசக் குடியரசை இலங்கையில் உருவாக்க இப்புனித நாளில் சங்கற்பம் செய்வோமாக!

மலர் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

# யானை பீடி

தரத்தில் நிகரற்று விளங்கும்

## "யானை பீடியை"

புகைத்து இன்புறுங்கள்

தயாரிப்பாளர்கள்:

## யானை பீடி கம்பனி

130, ஆட்டுப்பட்டித் தெரு,

கொழும்பு - 13.

# வட்டுக்கோட்டைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்

திரு. ஆ. தியாகராசா M. A., M. Lit. அவர்களின்

# வாழ்த்துரை

"ஆடுவோமே பள்ளு பாடுவோமே
ஆனந்த சுதந்திர மடைந்துவிட்டோ மென்று"

என்ற முது மொழிக்கிணங்க நாம் பூரண சுதந்திரமடைந்த மகிழ்ச்சியில் திளைத்து நிற்கின்றோம். நாம் எல்லோரும் இந்நாட்டுமன்னர். இதைப் பாதுகாக்க நாம் எல்லோரும் ஒரு கொடியில் சேர்ந்து எம் எதிர்காலத்தைப் பலப்படுத்தி எமது பிரச்சினைகளைத்தீர்க்கப் பாடுபடுவோம்.

எதிர்வரும் ஆண்டு இதன் முதற்படியாக விளங்கும் சுதந்திரம் மலர்ந்து நன்மை புரியும் வகையில் நாம் பொறுமையுடனும் கடின உழைப்புடனும் வெற்றியைக் காண்போம்.

---

## தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர்

திரு. மா. மகாதேவன் B. A. (cey.); B. A. Hons (Lond) Dip. in Ed. (cey.)

# வாழ்த்துகிறார்

எங்களுடைய நாட்டின் வரலாற்றில் மே மாதம் 22 ஆம் நாள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தினமாகும். நானூறு அந்நிய, ஏகாதிபத்திய ஆட்சிக்குப் பின்பு இப்பொழுது நாடு பூரண சுதந்திரமடைந்துள்ளது. இலங்கையிலுள்ள எல்லா இனத்தவர்களும் கொண்டாட வேண்டிய தினமாகும். இத்தருணத்தில் காங்கேசன்துறைத் தொகுதி அபிவிருத்திச் சபை இம் மலரை வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இச்சபை தொகுதியின் முன்னேற்றத்திற்கு மேலும் நற்பணிபுரிய வாழ்த்துகின்றேன்.

மல்லிகை ஆசிரியரும்,
பிரபல எழுத்தாளருமான

## திரு. டொமினிக் ஜீவா

# வாத்த்துரை

சரித்திர காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து நமது தாய்த் திரு நாடு மன்னர்களின் ஆட்சி அமைப்பிற்குட்பட்டு வந்தது. அதன்பின்னர் நீண்ட பல நூற்றுண்டுகளாக அந்நிய ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களுக்கும் அடிமையாக இருந்தது.

இப்போது மலர இருக்கும் குடியரசு அமைப்பு இலங்கையின் சரித்திரத்திலேயே ஒரு புதுமையான அமைப்பு. இதன் நன்மைகளை எதிர்கால சந்ததி நிச்சயம் போற்றிப் பாராட்டுவதுடன் இதன் பெறுபேறுகளை அனுபவிக்கும் என்பது திண்ணம்.

மனிதர்கள் வருவார்கள் போவார்கள். அதேபோல் மனிதர்களைக்கொண்ட கட்சிகளும் தோன்றும் மறையும், ஆனல் நமது நாட்டில் ஏற்படும் குடியரசு அமைப்பு இன்னும் செழுமைப்படுத்தப்பட்டு ஒரு சோஷலிஸ சமுதாய குடியரசாகக் கூடிய சீக்கரம் மலருமென நிச்சயம் நம்பலாம்.

தோன்றியுள்ள புதிய குடியரசு அமைப்புடன் நாம் திருப்தியடையாது வரப்போகும் சோஷலிஸ குடியரசு மலர்வதற்கான சகல நன் முயற்சிகளில் ஈடுபடுவோமாக.

★

★ ★ ★ ★ ★

## சில்லையூர் செல்வராசன்

14, அல்பர்ட் கிறசன்ட்,
கொழும்பு-7.

# வாழ்த்து!

குடிமகன் ஆட்சி எங்கள்
கோலமார் தாய்நாட்டின் கண்
அடியிடப் படுதற்கான
ஆரம்ப சதனமாகக்
குடியரசுதயம் இன்று
குதிர்ந்ததை நினைவுசெய்யும்
படி எழில் விழா எடுத்தும்
பண்புடையோர்க் கென்வாழ்த்து!

தோழர்களே! காங்கேசன்
துறை அபிவிருத்திச் சங்கத்
தாளர்காள்! பதிப்பிக்கின்ற
தண்டமிழ் மலரின் வண்ணம்
ஈழமா நாட்டின எல்லா
இயல் தொறும் துறையின் தோறும்
சூழவே தக்கதாகச்
சுடர்க உங்கள் சேவை!



நியமன

நாடாளுமன்ற உறுப்பினரும்

சிறுபான்மை தமிழர்

மகாசபைத் தலைவருமான

திரு. M. C. சுப்பிரமணியம் M. P.

வாழ்த்துகிறார்

"இலங்கை குடியரசு" ஒரு சரித்திர சம்பவம். கால்நூற்றாண்டு போராட்டத்தின் வெற்றியாக பிரசவிக்கும் "இலங்கை குடியரசு" சகல வளமும் பெற, விஞ்ஞான சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க வாழ்த்துகிறேன்.

மலர் சிறப்புறவும் விழா வெற்றி பெறவும் வாழ்த்துகிறேன்.

---

காங்கேசன்துறை ஆங்கில மகா வித்தியாலய அதிபர்

# திரு. எஸ். ஆர். சண்முகரத்தினம் அவர்களின் வாழ்த்துரை

— o —

இலங்கை குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தப்படுவதை கொண்டாடும் வகையில் காங்கேசன்துறை அபிவிருத்திச் சபையினர் சிறந்த 'குடியரசு மலர்' வெளியிட முன் வந்திருப்பதைப் பாராட்டுகின்றேன்! வாழ்த்துகின்றேன்.

அந்நியர் ஆட்சியில் அடிமைப்பட்டு அல்லல்பட்டிருந்த ஈழத்திருநாடு சுதந்திர தாகமும் நாட்டுப்பற்றும் மிக்க தலைவர்கள் பலர் நடாத்திய தியாகப் போராட்டங்களால் இன்று பூரண சுதந்திரமுடைய குடியரசாக மலர்ந்துள்ளது. நாம் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பதும், நாட்டை வளம்படுத்துவதும் நமது குறிக்கோளாக இருத்தல்வேண்டும். வேற்றுமைகளைக் களைந்து தேசிய ஒருமைப்பாட்டை நிலைநாட்டி நாட்டை செழிப்படையச் செய்வதற்கு ஒவ்வொரு குடிமகனும் அயராது உழைத்தல் அவசியம்.

நமது நாட்டை தன்னிறைவு கொண்ட செல்வத்திருநாடாக்குவதில் காங்கேசன்துறை அபிவிருத்திச் சபையினர் சிறந்த பணியாற்ற முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது! பெருமைக்குரியது.

வாழ்க ஸ்ரீலங்கா! வாழ்க குடியரசு!

வெல்க காங்கேசன்துறை அபிவிருத்திச் சபையினரின் ஆக்கப்பணிகள்

## ப. நோ. கூ. சங்கங்களுக்கு அரிய சந்தர்ப்பம் !!!

## பண்டத்தரிப்புக் கோவிற்பற்று ப. நோ. கூ. சங்கத்தின்

## மின்தறி ஆலையில் தயாரிக்கப்படும்

*தரம் மிக்க, நீடிய பாவிப்புடைய*

*விலை குறைந்த செயற்கைப் பட்டுப்புடவைகளைப் பாவியுங்கள்,*

* நைலெக்ஸ் சாறிகள்
* றெயோன் சாறிகள்
* டெட்ரோன் கொட்டன் சேட்டிங்
* சூட்டிங்

*மேலும்பல வேலைப்பாடமைந்த சேலைவகைகள் உற்பத்தியாக்கப்படுகின்றன*

**மொத்த வியாபாரிகளுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும்**

**பிரத்தியேக கழிவுடன் விற்கப்படும்,**

பண்டத்தரிப்புக் கோவிற்பற்று
ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.

தொலைபேசி: 36 / 808 } பண்டத்தரிப்பு.

யாழ் - மாநகர முதல்வர்

## திரு. அல்பிரட். த. துரையப்பா

# வாழ்த்துகிறார்

இலங்கை குடியரசாக மாறுகின்ற சம்பவம் வரலாற்றில் புதிய அத்தியாயம் ஒன்றை ஆரம்பிக்கின்றது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நிகழ்ச்சியை நாம்வரவேற்று, முற்போக்கு அணியுடன் ஒத்துழைத்து மேலும் செழுமையாக்குவோம்.

குடியரசு இலங்கை வாழ்க! வளர்க!

---

## இலங்கை சமசமாஜக்கட்சி யாழ் - கிளைச் செயலாளர்

## திரு. அ. விசுவநாதன் M. M. C.

# வாழ்த்துகிறார்

பல நூற்றாண்டுகளாக அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்பட்டுக்கிடந்த நாம் 1948 இல் பெற்ற சுதந்திரம் இன்று குடியரசாக மாறுகின்ற நிகழ்ச்சியுடன் மேலும் செழுமையுறுகின்றது.

குடியரசை வாழ்த்தி வரவேற்கின்ற நாம் அதன் பெறுபேற்றைப் பெற வேண்டுமாயின் அரசின் முற்போக்குத் திட்டங்களேயும் 5 ஆண்டுத் திட்டத்தை யும் வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

இலங்கை குடியரசு வாழ்க!

அதன் இலட்சியங்கள் வெல்க!

# "மேன்மையுறக் குடிமை நீதி" — பாரதி

வ. பொன்னம்பலம் M. A.

—:—

பழமை மறைகிறது, புதுமை மலர்கிறது. நாள்பல செல்லச் செல்ல, உலக அரங்கில் புதிய நாடுகள் பல தோன்றுகின்றன. ஏகாதிபத்திய யுகத்தடியை முறித்தெறிந்து முதலாளித்துவ முறையைத் தகர்த்து சமதர்மச் சாயல்கொண்ட சமூகங்கள் சுதந்திர நாடுகளாக, சுயாட்சி பெற்ற மக்கள் குலங்களாக எண்ணிக்கையில் பல்கிப் பெருகி வளர்கின்றன. இந்த வரிசையில் ''குடிமக்கள் சொன்ன படி குடிவாழ்வு'' ''மேன்மையுறக் குடிமை நீதி'' ''கொடியொன்றில் எழுந்தது பால் குடியரசு'' என்று பாராட்டிப் புகழ்ந்து பாடிய தமிழ்க் கவிஞன் பாரதியின் கவனத்தை ஈர்ந்த சோவியத் குடியரசு முன்னிற்கிறது. முதன்மை பெறுகிறது.

''இடிபட்ட சுவர்போல கலி வீழ்ந்து கிருத யுகம்–''மக்கள் யுகம்; எழுந்த கதையை மாமேதை லெனின் தலைமையில் சோவியத் நாட்டின் பாட்டாளி வர்க்கம், விவசாயிகள், படித்தவர்கள், தேசபக்தி மிக்க படையினர் ஒன்றிணைந்து அமைத்த சோவியத்து ஒன்றியத்தை புதிய சமதர்ம ஆட்சி முறையை உலகின் முதலாவது சோஷலிஸக் குடியரசை 1917-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற புதுமைப் புரட்சி புது யுகம் கண்டது. அகிலமேயுய்ய வழிகாட்டியது, சோவியத்து நாடு குடியரசாக மலர்ந்தது 1917ல் எனினும் 1929–ல் தான் தனக்கென ஓர் குடியரசுச் சாசனத்தைச் சமதர்ம அடிப்படையில் அமைத்துக்கொண்டது. 100 தேசிய இனங்கள் வரை இங்கு உரிமை பெற்று இணைந்து வாழும் இன்பப் பூங்காவாக ஓர் புதிய மக்கள் குடியரசாகச் சோவியத்து 1930 முதல்தான் பரிணமித்தது. இந்த இடைப்பட்ட காலஎல்லையில் தொழிலாளிவர்க்க சர்வாதிகாரம் இடம் பெற்ற சோவியத் நாட்டைப் பழைய பிற்போக்குச் சக்திகள் ஏகாதிபத்திய தாசர்கள், முதலாளித்துவசக்திகள், நிலப்பிரபுக்கள் நீண்ட நெடுங்காலப் போராட்டங்களில் ஈடுபட வைத்து இளம் தொழிலாளர் அரசைச் சீரழிக்க முயன்றனர். இவற்றை எதிர்த்து நின்று சாடித் திட்டமிட்ட பொருளாதார அமைப்பொன்றின்கீழ் 20 ஆண்டுகள்வரை நாட்டை வழிநடத்திய பின்புதான் சமஷ்டிக் குடியரசுகளும், சுயாட்சி மாநிலங்களும், கிராமங்களும் கூடத் தோன்றிச் சோவியத்து நாட்டின் பெரிய சிறிய தேசிய இனங்களுக்குச் சுதந்திரத்தை, சமத்துவத்தை, சமசந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் வகையில் ஓர் சுரண்டலற்றசோஷலிஸப்பொருளாதாரமொன்றைக் கட்டி வளர்த்தனர். மனிதனை மனிதன் சுரண்டி வாழாத; அடக்கவோ, அழிக்கவோ முற்பட முடியாத சோஷலிஸ சமூகம் இன உரிமை காக்கும் அரண். சமத்துவம் நாடி நிற்கும் மக்கள் குலங்களில் தேசிய மரபுகள் பூத்துக் குலுங்கும் புதுமைப் பூங்கா. இந்த நாட்டில் உழுபவர்க்கு நிலம், உழைப்பாளர் கையில் ஆட்சி பாட்டாளிகளுக்குப் பாதுகாப்பு. தேசிய செல்வமும் சொத்தும் அனைவருக்குமாக அனைவரின் நலன் காக்க என்று அமைந்த அற்புதக் குடியரசு இனங்களின் தனித்துவம், சோஷலிஸ உள்ளடக்கத்தின் உறுதியான அத்திவாரத்தி

லமைந்தது. இது வரலாறு கூறும் உண்மை. எமது நாட்டின் இன்று அமையும் குடியரசு ஓர் சரித்திரக் காலகட்டத்தின் எமது நாட்டை ஏகாதிபத்தியத்தில் இருந்து விடுவித்து முதலாளித்துவம் அல்லாத வழியில் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டு, சோஷலிஸ சமுதாய அமைப்பை நாடிச் செல்ல ஆக்கப்பட்ட ஓர் அரசியல் அமைப்பகுாம். அரசியல் அமைப்புகள் வளர்ந்துவரும் இளைஞர்களுக்கு அவ்வப்போது பெற்றோர்கள் அணிவித்து அழகு பார்க்கும் அற்புத ஆடை ஆபரணங்களையொத்தது. ஐந்து வயதில் தைத்த உடை பத்து வயதில் பொருந்தாது. புதிய வளர்ச்சிக்கேற்ப புதிய தேவைகளைக் கருத்தில் கொண்டு ஆடையின் அளவும், அமைப்பும் மாற்றமடைகிறது. சமுதாயம் மாறும் இயல்பு உள்ள விரைந்து வளரக்கூடிய நேற்றைய கோரிக்கைகள் இன்றையோ, நாளையோ தொடர்ந்தும் அதே வடிவில் நிலைபெறுவதாக இல்லை. புதிய புதிய கோரிக்கைகள் புதிய தேவைகளை அனுசரித்துத் தோன்றுகின்றன. அமெரிக்கக் குடியரசு அமைந்த சில நூறு ஆண்டுகளில் பலநூறு திருத்தங்களைத் தனது நெகிழா யாப்பில் ஏற்படுத்திக்கொண்டுள்ளது. இந்தியக் குடியரசு அமைந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் பல திருத்தங்களைத் தனது யாப்பில் ஏற்படுத்திவிட்டது இன்னமும் ஏற்படுத்தக் காத்து நிற்கின்றது. தனிச் சொத்துரிமை முறைக்கு எதிராக மன்னர்களுக்கு மானியம் வழங்கிய முறைக்கு எதிராக ஏகாதிபத்தியத்துக்கும், நிலப்பிரபுத்துவத்துக்கும் எதிராக இந்திய உபகண்டத்தில் ஏற்பட்ட அரசியற் பேரெழுச்சி; மக்கள் எழுச்சியாக மாறி இந்தியாவின் மறுமலர்ச்சிக்கு இந்தியாவை வழிநடத்த இந்திய யாப்பை அதற்கு ஏற்றபடி திருத்த அரசியல் அனுமதியாகப் பொதுத் தேர்தல் முடிவுகளால் இந்தியத் துணைக் கண்டத்தைப், புதிய பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. எனவே அரசியல் யாப்புகள் மாற்றமுடியாததாக அமைந்து விட்டால் அதை அப்படியே நிலைத்து நிற்பவை என்று எவரும் நம்பவோ பிறரை நம்பவைக்கவோ முயல முடியாது. இலங்கையில் இன்று அமைந்துள்ள அரசியல் யாப்பு பூரணத்துவம்பெற்றது என்று கூறிவிடுவதற்கில்லை. ஆனால் மக்களை மேலும் சரியான திசைக்கு அழைத்துச் செல்ல முயலும் ஓர் பிரதான அரசியல் வளர்ச்சிக் கட்டத்தில் ஓர் பிரதிபலிப்பு என்று அமைந்த குடியரசைப் பார்த்து ஓர் அரசியல் அவதானி குறிப்பிட்டால் அதை மறைத்து வைக்க மனச்சாட்சி படைத்த எந்த ஒரு மனிதனும் மறுத்துரைக்க முடியாது. இலங்கைக் குடியரசின் அரசியல் நோக்கங்கள் நடைமுறைக்கு வருவதாக இருந்தால் பொருளாதாரத் துறையில் அது மறுமலர்ச்சி காணவேண்டும். உரிமைகள் வெறும் சாசனங்களாக நிலைபெற முடியாது? அவை வாழ்வில் குடிமக்கள் அனைவர்க்கும் உணவாக, உடையாக, வீடாக, கல்வியாக, சுகவாழ்வாக, தொழிலாக சுருங்கக்கூறில் சீரும் சிறப்பும் உள்ள தனிவாழ்வாக மலரவேண்டும்.

இத்தகைய மறுமலர்ச்சி இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. அனைவரையும் வாழவைக்கக்கூடிய பாகுபாடற்ற பொருளாதார வளர்ச்சியை நிலைக்களனாகக் கொண்டுதான் மொழியும், கலையும் மறுமலர்ச்சியுறமுடியும். இந்த நாட்டின் இரு கண்களாகத் திகழும் அன்னை மொழிகளாம் சிங்கள



இக் கட்டுரையை எழுதியிருக்கும் தோழர் வ. பொன்னம்பலம் அவர்கள் வட இலங்கை முற்போக்குவாதிகளின் முன்னேடியாகத் திகழ்பவர். அவரது ஆதரவாளர்களால் 'வி. பி' என்று அன்போடு அழைக்கப்படும் இவர், இன்றைய ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு வடபகுதியில் பெரும் செல்வாக்கை ஏற்படுத்தியிருக்கிருரென்ருல் மிகையாகாது. பல முக்கியமான தாபனங்களில் பொறுப்புமிக்க பதவிகளை வகிப்பவரும், பிரமுகர்களிடையேயும், பொது மக்களிடையேயும் மிகுந்த செல்வாக்கையுடையவருமான 'வி. பி' அவர்கள் பழகுவதற்கு மிக எளியவர்; இனியவர்; கண்ணியமானவர்.

மும், தமிழும் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கிலமும் சேர்ந்து தாய் மொழியில் கல்வி அயல் மொழியறிவு; உலக வழித் தொடர்பு வளர்க்கும் நடைமுறைச் சாத்தியமான ஓர் மும்மொழித் திட்டம், அமையவேண்டும். தமிழர் பரம்பரையாக வாழ்ந்து வரும் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் அரசகரும மொழியாகச் சிங்களம் இருக்கும் அதே வேளையில் தமிழும் ஆட்சி மொழியாக நீதிமன்ற மொழியாக நிலைபெறவேண்டும். தமிழ் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமது உள் விவகாரங்களைத் தாமே வழிநடத்தக்கூடிய சுயாட்சி அமைப்பொன்றை ஐக்கிய இலங்கையில் ஏற்படுத்தியாகவேண்டும். இவற்றைச் சாதிக்க ஓர் சோஷலிஸ சமூக அமைப்பின் வளர்ச்சிக்கு, வர்க்க பேதமற்ற சமுதாயத்தின் உதயத்திற்கு, இன வேறுபாடுகள் கலந்த ஓர் உலைக்கும் மக்களின் அரசு உதயமாகவேண்டும். அந் நன்னுளை நோக்கி அண்மையில் மலர்ந்த மக்கள் குடியரசு பீடுநடை போடட்டும். இலங்கையிலுள்ள சகல முற்போக்குச் சக்திகளும் ஒன்றிணைந்து அனைவர்க்கும் வாழ்வுரிமை தந்து, குடியுரிமை காத்து, மொழியுரிமை பேணத் துணைநிற்கட்டும். இனங்கள் தனித்து, இவற்றைச் சாதிக்க இன்றுவரை முடியவில்லை. இனிமேலும் முடியாது. சேர்ந்து வாழ்ந்து சமத்துவம் காண்போம். சிங்களவர்கள் மூத்தவர்களாக ஏற்று அவர்களின் மொழிக்கு முதன்மை தந்து தமிழிலும் தனக்குரிய சிறப்பு இடத்தை; மொழிக்குரிய அங்கீகாரத்தைப் பெற அனைவரும் இணைந்து இயக்கம் காண்போம். வாழ்க இலங்கைக் குடியரசு. வளர்க தேசிய ஐக்கியம்.

# தூய ஈழமே நாம் விழைவது

காரை. செ. சுந்தரம்பிள்ளை

மன்ன ராட்சி விடைபெற் றெழுந்தது
மக்க ளாட்சி மகிதலம் வென்றது
என்ன? நாமினி யாவரும் ஓர்நிறை
இங்கு நாமெலாம் மன்னுதி மன்னர்கள்
முன்னை நாளைய தாழ்வுயர் வென்பன
முட்டி மோதிய பேதகு ரோதங்கள்
அன்ன யாவும் அழிந்து மறைந்தன
ஆட்சி மக்கள் வசம்பொலி வுற்றது.

**வேறு**

மேன்மை யேயுறக் குடிமை நீதியும்
வெற்றி பெற்றது; என்ற போதிலும்
நான் உரைத்திட வொன்று உள்ளது
நாடு வாழ்ந்திட நன்மை சேர்ந்திட
கூன்வி ழுந்தநம் மக்கள் போக்கினை
கொள்கை யற்றவீண் பித்தர் நோக்கினை
ஆன்ற நேர்வழி சென்று மாற்றிடில்
அஃனை ஈழமும் நன்மை காணுவாள்.

பிறந்த நாட்டினப் பற்றி லாதவர்
பேசும் தாய்மொழிப் பாச மற்றவர்
மறந்து மோர்தொழில் செய்தி டாதவர்
மற்ற வர்தய வுற்று வாழ்பவர்
இறந்த காலத்தி லின்னும் நிற்பவர்
லஞ்சம் என்கிற நஞ்சை யுண்பவர்
அறந்தி றம்புவோ ரான பேர்களை
அகற்றி டாவிடில் குடிமை லாபமா?

இந்த நாள்வரை ஈழ மண்ணிலே
எடுத்த தற்கெலாம் அடுத்த நாட்டையே
நொந்த வண்ணமே பார்த்தி ருந்தநாம்
நொய்ம்மை யுற்றனம் நாண மற்றனம்
வந்து சேர்ந்திடும் கப்பல் பிந்துமேல்
வயிறு காய்ந்திடும் இழிவை மாற்றிட
மைந்தர்கள் தொழில் நூறு செய்திட
மார்பு தட்டியே எழுதல் நல்லது.

பஞ்ச மில்லையாம் பணமி ருக்குது
படித்த வர்க்கெலாம் தொழிலி ருக்குது
வஞ்ச மில்லையாம் வளமி ருக்குது
வயலி ருக்குது பயிர்சி றக்குது
நஞ்ச ரில்லையாம் நாடு வாழுது
நலிவு இல்லையாம் நோயு மில்லையாம்
துஞ்சல் இல்லையாம்; என்று சொல்லுமோர்
தூய ஈழமே நாம்வி ழைவது.

## NORTHERN DIVISION AGRICULTURAL PRODUCERS CO-OPERATIVE UNION LTD.

The N. D. A. P. C. Union, Jaffna is an association of farmers formed for the purpose of.–

1. Providing a means by which affiliated societies can express their collective views;

2. Buying and supplying seed, manure, agricultural implements, pesticides and any other basic production requirements to members;

3. Providing facilities to member societies to introduce scientific methods of cultivation and animal husbandry;

4. Purchasing, collecting, grading, bulking, processing transporting and selling of produce of its members;

5. Doing all such things as are incidental or conducive to the attainment of the above objectives.

By its buisnesslike method and far sighted policy the Union has attempted to encourage a greater distribution of wealth so that a prosperous peasantry may form the backbone of an equally prosperous country. It has also created a growing faith in the scientific way, in the way to master the machine and make it work for man, in the power of the collective and in the glorious destiny of the producers of food.

> "Co-operation presents itself to individuals and to groups as the method of combining their experience and diversities without sacrificing them in such a way that the prosperity of each. becomes an earichment of all, and the strengthening of all becomes a re-inforcement of each."

EXTEND YOUR CO-OPERATION TO THE UNION IN THE SERVICE OF THE PEASANT

## அரசியல் அமைப்பு பற்றி



# அமைச்சர் கொல்வின்

நாம் எவ்வளவு தூரத்திற்கு அடிப்படை உரிமைகளை வழங்க வேண்டும் என்பது ஒரு சிக்கலான பிரச்சினை. இதற்காக ஒருசரத்தை உருவாக்கும் போது இப்பிரச்சினைக்கு முடிவு காண்பதும் சிக்கலாக இருக்கும். எல்லோரும் சமுதாயத்துடன் சேர்ந்துதான் வாழவேண்டும். சமுதாயத்துடன் ஒருவன் சேர்ந்து வாழும்போதுதான் அவன் தன்னை முன்னேற்றிக் கொள்ளுகின்றான். காலத்துக்கு காலம் மனித அபிவிருத்திக்காக இருக்கும் தொடர்புகள் மாறுபட்டு வருகின்றன. எப்போதும் இருக்கக் கூடிய சுதந்திரங்களை நாம் தயாரிக்க முடியாது. மதங்கள் கூட அத்தகைய சுதந்திரங்களை கட்டுப்படுத்தவில்லை. அந்தந்தகாலத்தில் மனிதனுக்கு தேவையான அபிவிருத்திக்காக சமுதாயத்திலிருக்கும் தடைகளை நாமகற்ற வேண்டும்.

*நீதிமன்றங்கள் பற்றி:-*

எமது நாட்டில் நீதிமன்றம் இருப்பது வழக்கறிஞர்களுக்காக அல்ல. இன்னாட்டு மக்கள் தமது சிக்கல்களை, பிரச்சினைகளை தீர்ப்பதற்காகத்தான் நீதிமன்றங்கள் உள்ளன. பொதுமக்கள் தமது சிக்கல்களை பிரச்சினைகளை இலேசாக, விரைவாக, நீதிமன்றம் மூலம் தீர்த்துக் கொள்ள வழிசெய்வது அவசியம். சிங்களத்திற்கும் தமிழுக்கும் நீதிமன்றங்களில் இடமளிப்பதற்கு நாம் அரசமைப்புமூலம் வழிசெய்துள்ளோம். எமது நடவடிக்கை சிங்களத்திற்கும் தமிழுக்கும் நீதிமன்றங்களில் உரிய இடங்கொடுத்துள்ளது.

# "மேன்மையுறக் குடிமை நீதி"

அரியாலையூர், வே. ஐயாத்துரை

மூத்த முடியரசை முட்டி முறியடித்து
யாத்த பிறர்முடியை யாம்வேண்டோம் – பூத்த
குடியரசுக் கோலேந்திக் குன்றுத ஆட்சி
வடிவுறவே செய்வோம் வழி.

கூன்விழுந்த கொள்கைகளைக் குழியிற் போட்டுக்
        கூரார்ந்த நெறிகளினை ஒளிரச் செய்தே
நான்எனது என்றவிறு மாப்பை நீக்கி
        நாட்டினிலே யாவருமோர் குலமாய் நின்று
கோன்னமக்கு நாமென்னும் குணமே பொங்கக்
        கூட்டுறவு முறைதனிலே வளங்க ஈட்டி
"மேன்மையுறக் குடிமைநீதி" விளங்க அன்பே!
        வியாபிக்கும் இலங்கைகுடியாட்சி காண்போம்.


**TOURING JAFFNA!**

**Yes! you will then certainly**

**need Subhas Tourist Hotel**

**Approved by the Ceylon Tourist Board**

**Leading Hoteliers**




PRESENT YOU WITH CLEAN
COMFORTABLE AIRY ROOMS
AND ATTACHED BATHS
IDEAL PLACE FOR PARTIES THE ONLY HOTEL IN JAFFNA
WITH A ROOF TOP GARDEN.

# பொருளாதார விடுதலையும் தேச விடுதலையும் பற்றி

# லெனின்

பாட்டாளி வர்க்க சர்வதேசியம் பற்றிய மார்க்ஸ் - ஏங்கெல்ஸ் போதனையை அபிவிருத்தி செய்த லெனின் அனைத்து ஏகாதிபத்திய - எதிர்ப்புச் சக்திகளின் ஒற்றுமை, உலகப் புரட்சி இயக்கங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்தல், ஏகாதிபத்திய–எதிர்ப்புப் போராட்டத்தில் காலனி மக்களையும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தையும் ஒருங்கிணைத்தல் பற்றிய தத்துவத்தை உருவாக்கினார்.

"வளர்ச்சியடைந்த நாடுகளில் பூர்ஷ்வா வர்க்கத்திற்கு எதிரான உள் நாட்டுப் போரும், வளர்ச்சியடையாத பின்தங்கிய, ஒடுக்கப்பட்ட நாடுகளில் இடையறாத ஜனநாயக, புரட்சிகர இயக்கங்களும் ஒன்றுபடும் சகாப்த வடிவில் தான் சமுதாயப் புரட்சி தோன்ற முடியும்" என்று லெனின் கூறினார்,

ரஷ்யாவில் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி வெற்றி பெற்ற பிறகு, மேலை நாட்டுப் பாட்டாளி வர்க்கமும் கீழை நாட்டு மக்களும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான கூட்டுப் போராட்டத்தில் சோஷலிஸ அரசுடன் இணைந்து நின்றால் தான் உலகம் முழுவதும் சோஷலிஸப் புரட்சி வெற்றிபெற முடியும் என்று லெனின் இடையறாது வலியுறுத்தினார்.

அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்குப் பிறகு இளம் சோவியத் அரசு தங்களது தேச விடுதலைப் போராட்டத்தின் அரணாக விளங்குவதை ஒடுக்கப்பட்ட நாடுகள் கண்டன. எத்தனையோ தொல்லைகளுக்கிடையிலும், வலிமை வாய்ந்த தலையீட்டுச் சக்திகளும் உள்நாட்டு எதிர் புரட்சி சக்திகளும் தன்னைச் சூழ்ந்து நின்ற போதிலும், சோவியத்நாடு சீனா, மங்கோலியா, ஆப்கானிஸ்தான், துருக்கி மற்றுமுள்ள மக்களின் ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போராட்டங்களுக்கு லெனினது உத்தரவின் பேரில் நேய உதவி அளித்தது. இந்த உதவியின் ஆக்கபூர்வமான விளைவுகள் வரலாற்றில் இடம் பெற்றன. அதாவது, ஆப்கானிஸ்தான், மங்கோலியா, துருக்கி முதலிய நாடுகளில் காலனியாதிக்கத் தளைகள் நொறுக்கப்பட்டன. அந்தக் காலத்தில் காலனியாதிக்கத்தின் மீதான தாக்குதல் பரந்து விரிந்த தன்மையைப்பெற முடியவில்லை என்பது உண்மையே. ஏனெனில் உலக அரசியல் சக்திகளின் பலாபலம். அப்பொழுது ஏகாதிபத்தியத்திற்கு அநுகூலமாக இருந்தது. தேசவிடுதலை இயக்கத்திற்கு உதவுவதற்குச் சோவியத் அரசுக்கு மிகக் குறைந்த வாய்ப்புக்களே இருந்தன; எனினும், அது காலனியாதிக்கத்தை எதிர்த்துப் போராடிய நாடுகளுக்குத் தன்னாலியன்றவரை உதவியது. சீனாவுக்கு ராணுவ அரசியல் ஆலோசகர்களை அனுப்பி துருக்கிக்குப் பொருளாதார உதவி வழங்கியது; ஆப்கானிஸ்தானுக்கு அரசியல் ஆதரவு அளித்தது. சோவியத் ராணுவமும், மங்கோலியப் புரட்சிப் படையினரும் கூட்டாகப் போராடினர்.

இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு, சோஷலிஸ கூட்டுச் சமுதாயம் தோன்றியது; உலக சோஷலிஸ அமைப்பு நம்காலத்தின் தீர்மான சக்தியாக வளரத் தொடங்கியது; இந்தக் காலகட்டத்தில் காலனியாதிக்கத்திற்கு எதிரான பொதுத் தாக்குதல் தொடுக்கப்பட்டது. சர்வ தேசத் தொழிலாளர் இயக்கம் அதன் முக்கியப் படைப்பான உலக சோஷலிஸ அமைப்பு, தேச விடுதலை இயக்கம் ஆகிய வற்றின் நெருங்கிய ஒத்துழைப்பின் காரணமாக, மிகக் குறைந்த காலத்தில் (10 15 ஆண்டுகளில்) காலனியாதிக்க அமைப்பு தகர்க்கப்பட்டது. உலக அரசியல் அரங்கில் எழுபதுக்கு மேற்பட்ட புதிய சுதந்திர தேசிய அரசுகள் தோன்றியுள்ளன. இன்று காலனியாதிக்கம் ஒரு சில நாடுகளில் மட்டுமே உள்ளது.

எனினும் காலனியாதிக்க எதிர்ப்புப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்பதிலும், அது சிக்கலான, நீண்ட நெடும் போராட்டமாக இருக்கும் என்பதிலும் ஐயமில்லை. அரசியல் விடுதலை பெற்றுள்ள ஆசிய ஆபிரிக்க மக்கள், தமது "முதலாவது விடுதலை" யை மட்டுமே பெற்றுள்ளனர். அவர்களது சமுதாய, பொருளாதார, வாழ்விலிருந்து காலனியாதிக்கம் இன்னும் ஒழிக்கப்படவில்லை.

### பொருளாதார விடுதலைப் போராட்டம்

"பூர்ஷ்வா சித்தாந்திகள் பொருளாதார விடுதலையை விட்டு விட்டு, தேச விடுதலையைப் பற்றி பேசுகிறுர்கள் ஆனுல் பொருளாதார விடுதலைதான் மிக முக்கியமானது என்பதை யதார்த்தத்தில் காண்கிறேம்." என்று லெனின் இடித்துரைத்தார், வளரும் நாடுகளின் இன்றைய போராட்டத்தை "இரண்டாவது" சுதந்திரத்திற்கான போராட்டம் என்று கூறலாம். இந்தப் போராட்டம் விரிந்த அரங்கில் நடைபெறுகிறது. இதில் கோடிக்கணக்கான மக்கள் பங்கு கொள்ளுகின்றனர். நீண்ட நெடுங்காலச் சமுதாய, பொருளாதாரப் பிற்போக்கையும், வறுமையையும் எப்படி, எந்தச் சாதனங்களின் மூலம் ஒழித்துக்கட்டுவது என்ற பிரச்சினை இளம் விடுதலை நாடுகளை எதிர்நோக்குகிறது.....

### முன்னேற்றத்துக்கு மாபெரும் வாய்ப்புகள்.

இன்றைய காலகட்டத்தில் உலகப் புரட்சி இயக்கத்தின் சர்வதேசியத் தன்மை குணும்ச ரீதியில் ஒரு புதிய தீவிரத்தைப் பெற்று வருகிறது, தேச விடுதலை இயக்கத்தில் இரண்டு முக்கிய சந்தர்ப்பங்களால் இது உண்டாகிறது. முதலாவதாக, உலக சோஷலிஸ அமைப்பானது தேச விடுதலை இயக்கத்திற்குப் பன்முக ஆதரவளிக்கும் வாய்ப்பு பெருமளவில் வளர்ந்துள்ளது.

புதிதாக விடுதலை பெற்றுள்ள நாடுகளின் மீது ஏகாதிபத்திய சக்திகள் ஆக்கிரமிப்புச் செய்யும் வாய்ப்புகளைச் சோஷலிஸ நாடுகள் மிகவும் கட்டுப்படுத்தி விட்டன. சோஷலிஸ நாடுகள், தமது அரசாங்க, பொருளாதார, கலாசாரப் புனரமைப்பு அநுபவங்கள் காரணமாக, சமுதாய முன்னேற்றத்திற்குச் சீரிய வழி காண விரும்பும் இளம் விடுதலை நாடுகள் மீது மிகுந்த செல்வாக்கைச் செலுத்துகின்றன,....

தேச விடுதலை, முற்போக்கு — இவற்றுக்கான நாடுகளின் போராட்டத்தில் சோஷலிஸ சக்திகள், சர்வதேசத் தொழிலாளி வர்க்கம், தேச விடுதலை இயக்கம், இவற்றின் கூட்டணியானது தீர்மானமான அம்சமாக விளங்கும் காலகட்டத்தில் நாம் வாழ்கிறேம்.

— பேராசிரியர் ஜி. கிங்

# கவல்வு ✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶ "ஆசி. செல்வன்"

மூங்கில் மரச்சாரல் முழுமதியின் மென்கதிர்கள்
முந்தித் தழுவ முறைமுறையே நீர்க்குமிழி
தாங்கித் திரண்டு தளிர்மென் நடையாள்போல்
தள்ளித் திரைதவழும் மாவலியாற்றின் செழித்த
பாங்கிற் தமிழோடு பசுமையுணர் வூறும்
பாவை அருகே படுத்திருந்தாள்; பார்வையிலே
தேங்கித் துவண்டு திரளும் கவிதைகளின்
தேறற் சுவையிற் திளைத்து நிமிர்கையிலே —

வேளைக் குணவின்றி வேதனையால் வாடிநிதம்
வெந்து துடித்து வேகின்ற கண்களுடன்
ஆளை மயக்கிவெறும் அழகைப் பணயம்வைத்(து)
ஆடும் விழியாள்; அதனூடே அன்பில்லாப்
பாளை நிகர்த்த பற்கள் வெறியூட்டப்
பாதை அருகோர்நாள் பற்றிக் கரமிழுத்த
நாளை மனதில் நினைத்து, நடுவழியில்
நானும் சுவைத்த நெறிக்கு அசைகையிலே —

அந்தப் பெண் பின்னுகி அகத்திற் சுவையூற
ஆவல் திளைப்பில் அடுத்துச் சுவைத்தவைகள்
சிந்தைப் புறத்திற் செறிய வெறுப்பூடே
சீலக் கருத்துச் சிறிதே மனத்துந்தச்
சொந்தப் பெண்ணென்று சுளையாகத் தேர்ந்தெடுத்த
சொக்கும் விழியாளைச் சற்றே அணைத்தேனு; ......
நிந்த மெனுமுணர்வு நிறைவில், உளம்பொங்கி
நீண்ட மனவுலையில் நீற்றைப் பரவுகையில் —

யாழை அறியாதே இசைமீட்ட வந்தேனு ?
யாழின் இனிமை யானறிந்து மீட்டல் போற்
காளை வயதிற் கதிக்கும் உணர்வுகளாற்
கன்னி உணர்வு களைந்து இருப்பாளோ ?
ஏழை மனது எண்ணிப் பிணங்கியது;
ஏதில் கற்பு எனக்கிலேயே; ஈதென்ன —
ஊழை நினைந்து உருகி ஏது பயன் ?
உண்மை வழியில் உலகில் ஏதுண்டு ......?

# பிரமிக்கத்தக்க முன்னேற்றம்

தமது தேசிய சுயாதிபத்தியத்தைப் பலப்படுத்தவும், பொருளாதார சமூக முன்னேற்றத்தை ஊக்குவிக்கவும் பிரயத்தனம் எடுக்கும் இந்துமகா சமுத்திர மண்டலத்து நாடுகளில் இலங்கை முக்கியமான ஸ்தானம் வகிக்கிறது.

தன் சாதனைகளையிட்டு இலங்கை பெருமிதமடைவது சரியானதே. பல்லாண்டுகளாக பிரிட்டிஷ் காலனியாக இருந்த இத்தீவு அதன் பொருளாதாரத்தையும் கலாசாரத்தையும் கட்டி அபிவிருத்தி செய்வதில் பிரமிக்கத்தக்க முன்னேற்றமடைந்துள்ளது. புதிய கைத்தொழிற் துறைகள் நிறுவப்பட்டுள்ளன; கல்வியறிவின்மை குறைக்கப்பட்டுள்ளது; உயிர்களைப் பலியெடுத்த தொற்று நோய்கள் ஒழிக்கப்பட்டுள்ளன. சுதந்திரம் பெற்ற கால்நூற்றாண்டுக்குக் குறைந்த காலத்தில் கல்விக்காக இரண்டு மடங்கு செலவிடப்படுகிறது. சுகாதாரச் சேவைகளுக்காக 1945-ம் ஆண்டைவிட 14 மடங்கு நிதி ஒதுக்கப்படுகிறது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியையும், சமசமாஜக் கட்சியையும், கம்யூனிஸ் கட்சியையும் கொண்ட ஐக்கிய முன்னணி அதிகாரத்துக்கு வந்த 1970-ம் ஆண்டுக்குப் பின்னர், கலோனியல் ஆட்சி முறை விட்டுச் சென்ற கொடூரமான விளைவுகளை துடைத்தெறியும் முயற்சி உத்வேகமுற்றுள்ளது. ஆரம்பமாதத்திலேயே திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையிலுள்ள அரசாங்கம் பல முக்கியமான சமூக-பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டது. முக்கியதேவைப் பண்டங்களினதும் கணிசமான பகுதி சரக்குகளின் ஏற்றுமதியினதும் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது. அத்துடன், பொருளாதார அமைப்பில் பொதுத்துறையை விஸ்தரிக்கவும், அந்நிய மூலதனத்தைக் கட்டுப்படுத்தவும் முயற்சி எடுக்கப்பட்டது.

ஆனாலும், பாரதூரமான பிரச்சினைகளை இலங்கை எதிர்நோக்குகிறது, 1970 மே பொதுத்தேர்தலுக்கு முன் நாட்டை ஆட்சி புரிந்து தோல்வியுற்ற யு. என். பி. பொருளாதாரத்தை நலிவுறச் செய்தது. ஸ்தல பூர்ஷுவாக்களையும் நிலச் சுவான்தார்களையும் பிரதிநிதித்துவப் படுத்திய அக்கட்சி, ஏகாதிபத்திய நாடுகளிடமிருந்து இலங்கையின் தேசிய நலன்களுடன் உடன்பாடற்ற அடிப்படையில் கடன் வாங்கியது அந்நியக் கடன்களின் பெருக்கமும், அந்நிய வர்த்தகத்தில் பற்றுக்குறையும், மற்றும் பாதகமான விளைவுகளும் விலைகள் ஏறுமுகத்திலிருந்த பொருட்களை வாங்கவும் வேலை பெறவும் சாதாரண இலங்கையருக்குக் கஷ்டமாய் இருந்தது. அதிதீவிர சக்திகள் கடந்த ஏப்பிரலில் பண்டாரநாயக்கா அரசாங்கத்துக்கெதிராக நடத்திய ஆயுதப்புரட்சியும் பொருளாதாரத்தைப் பெரிதும் சேதப்படுத்தியது. இதனால் ஏற்பட்ட நேரடி நஷ்டம் 49 கோடிரூபாயாகக் கணிக்கப்படுகிறது.

இன்று நாட்டில் அமைதி நிலைநாட்டப்பட்டுள்ளது. ஆனாலும், பிற்போக்குச் சக்திகள் சும்மா இருந்தபாடில்லை. அதன் கொள்கையாலேயே உருவான கஷ்டங்களை வைத்துக்கொண்டு ஐக்கிய முன்னணியையும், முற்போக்குச் சக்திகளையும் பிளவுபடுத்த எத்தனிக்கிறது. உண்மையான முற்போக்குவாதிகள் இத்தாக்குத

லுக்குப் பதிலடி கொடுத்து தமது அணி யின் ஐக்கியத்தைப் பலப்படுத்தி, திட்டத் தில் இடம்பெற்ற சமூக பொருளாதார சீர்திருத்தங்களை அமுல் படுத்த கங்கணம் கட்டியுள்ளனர். 1972-1976-ம் ஆண்டு களுக்கு அரசாங்கம் தீட்டியுள்ள ஐந் தாண்டு அபிவிருத்தி திட்டத்தில் இது பிரதிபலிக்கப் பட்டுள்ளது. இத்திட்டம் பொதுத்துறையின் உற்பத்தியை 50 சத வீதம் பெருக்க வளிவகுத்துள்ளது. எஃகு, சிமெந்து, ரசாயனத் தொழில் முதலிய வற்றுக்கு மிகப் பெரிய தொகையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது விவசாயத்துறையி லும் பெரும் மாற்றங்கள் நிகழவிருக்கின் றன. விவசாய சீர்திருத்தம் வலியுறுத்தப் பட்டுள்ளது அரசாங்கப்பண்ணைக் கூட் டுத்தாபனம் அண்மையில் ஸ்தாபிக்கப்படு மென்று கொழும்புப் பத்திரிகையொன்று குறிப்பிட்டது இது பயிர் செய்யக்கூடிய காணிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும், அபரிமிதமான காணிகளை ஸ்வீக ரிக்கவும் பொறுப்பாய் இருக்கும்.

இந்நடவடிக்கைகள் அனைத்தும் இலங் கையின் சுதந்திரத்தை பலப்படுத்துவதை சாத்தியப்படுத்தி, ஐக்கியமுன்னணி அர சாங்கத்தின் அணிசேரா சமாதானக் கொள்கைக்கான ஸ்திரமான அஸ்திவா ரத்தை நிறுவ உதவும், இக்கொள்கையை சகல ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளும் -விசேஷமாக சோவியத் யூனியனும் மற் றும் சோஷலிஸ நாடுகளும் பாராட்டு கின்றன:

சகல துறைகளிலும் சோவியத்-இலங்கை உறவுகள் வெற்றிகரமாக வளர்ச்சிய டைந்து வருகின்றன. இவ்விரு நாடுகளி னதும் பரஸ்பர நன்மைக்காகவும் இவ்வு றவுகள் மேலும் வலுவடையவும் இந்து மகா சமுத்திரத்தில் அமைதிக்கும் பந் தோபஸ்துக்காகவும் இவ்வுறவுகள் மே லும் வலுவடையும் என்பதில் ஐயமில்லை.

('நியூடைம்ஸ் பெப்ரவரி 6-ம் இலக்க சஞ்சிகையிலிருந்தது.)

ஐ. குஸேவ்

---

# எழில் மிகுந்து இலங்குவையே !

கவிஞர் தெல்லியூர் நா. ஆறுமுகம்

இந்துவெனும் கடலணங்கு
எழில் பெருக்கி வளர்த் தெடுத்த
சுந்தரியே மூவினத்தின்
சோதிமிகும் பட்டுடையாய்
செந்திருவாழ் மதிவதனச்
செழித்ததன மலைச்சுரபீ
விந்தைபுரி நதியாரம்
விளங்குபசும் மேனியுளாய்!

காற்சிலம்பின் விலங்கறுத்த
கனமணியே கலைபிலங்கா!
வேற்றுமையற் றிடவளைக்கை
விந்தைபுரி குண்டலி நீ

போற்றுமிரு மொழி வளர்த்துப்
புகழ் பெருக்கித் தொழில் காட்டிச்
சாற்றுகின்ற சமநோக்கிற்
சந்ததமுங் குளிரவைப்பாய்!

சன்மார்க்க நெறி வளர்க்கும்
சகல கலைக் குடியரசீ!
புன்மார்க்கப் புல்லியர்க்கும்
புத்தி புகட்டித் திருத்தும்
நன்மார்க்கங் கடைப்பிடிப்பாய்!
நலிந்தவர்க்கும் வலிமை தந்து
இன் மார்க்க வழி செலுத்தி
எழில் மிகுந்து இலங்குவையே!

# புது அரசு

கவிஞர். வி. கந்தவனம்

புது அரசு—ஒரு
பொது வரசு—அது
புத்தபி ரானரசு!

அரசினிது—நிழல்
அருள் இனிது—அது
வானுல் மிகவினிதே!

இனியவைகள்—பல
இனத்தவர்க்கும்—மிக
ஏற்றவை யாதல் முறை.

முறை யுடனே—ஒரு
முடியரசாம்—எனின்
அதுவும் குடியரசே!

குடிகளை முன்—தமிழ்
முடியுடையோர்—அரு
முறையுடன் ஆதரித்தார்.

ஆதரித்தார்—உயி
ராய் மதித்தார்—அவர்
ஆண்டார் நீதிவழி.

வழி வருமா—எமக்
கெழில் தருமா—எனின்
வரட்டும் குடியரசு!


யாழ்ப்பாண மாநகர ப. நோ. கூ. சங்கம்

74/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 350

கூட்டுறவு புனருத்தாரண அமைப்பில் புதுப் பொலிவுடன்
யாழ் நகர மக்களைக் குதூகலத்துடன் வரவேற்கின்றது.

யாழ்ப்பாண மாநகரத்தில் 38 சில்லறை விற்பனை நிலையங்களுடனும்,
6 மொத்த விற்பனை நிலையங்களுடனும் குறைந்த செலவில்
மக்களின் தேவையைப் பூர்த்திசெய்து வருகின்றது.

* நுகர்ச்சிப் பொருட்கள்
* இரும்பு, சிமெந்து, கட்டட உபகரணங்கள்
* ஆடம்பரப் பொருட்கள்
* புடைவை வகைகள்
* பால் உணவு, கோழித்தீன்
* காகிதாதிகள், மட்பாண்டங்கள்

முதலிய

உங்கள் தேவைகளைக் கூட்டுறவுச்சங்கங்களிலேயே பெற்றுக்கொள்ளுங்கள்

# ★ வருக! குடியரசு! ★

— புதுமைலோலன் —

குடியரசு பிறக்கின்றது. குடிமை நீதி மேன்மையுற எம்மை நாமே பூரணமாக ஆளும் பான்மையே குடியரசாகும்.

சுதந்திரம் பெற்றும் மகாராணியாரை அரசியாகக்கொண்டநிலை என்றும் வேண்டியது தானா? எம்மை நாமே ஆளும் தன்மை, தேசிய உணர்வு எமது தாயகம் என்ற பற்று உண்மையிலிருக்குமானால், குடியரசு என்ற பூரணசுதந்திரத்தினை நாம் வரவேற்றேயாக வேண்டும்.

ஆனால்...... ''ஆனால் தமிழரது நிலை குடியரசுப் பிரகடனப்படி தாழ்த்தப்பட்டுள்ளது; மொழியுரிமை பூரணமாகத் தரப்படவில்லை. தமிழ் நீதி மன்றத்தில் சிங்களமும் இருக்கும், விரும்பினால் மட்டுமே தமிழ், முன்பிருந்த 29–வதுசரத்துப் போன்ற சட்டப் பாதுகாப்பு சிறுபான்மையினருக்கில்லை .... பௌத்த மதமே உயர்வடைய வழிகாட்டப்பட்டுள்ளது...'' என்றெல்லாம் கூறி, குடியரசினைப் பகிஸ்கரிக்கவேண்டுமென ஓரியக்கத்தவர் — பகிஸ்கரிப்பதும், கறுப்புக் கொடி தூக்குவதும், பின்பு ஐ. தே. க. ஆட்சிக்கு வந்ததும் ஆலவட்டம் தூக்குவதும் கொள்கையாகக் கொண்டவர்கள் — தமிழ் மக்களைக் கோரியுள்ளனர்.

சென்ற காலங்களில் கூட, சோல்பரித் திட்டம் தந்த ஆட்சி தமிழருக் கொவ்வாதது என்றனர். ஒரு பக்க நீதி கோருவது என்றனர். அதனால் சுதந்திர தினம் வரும்போதெல்லாம், அதனைத் துக்க நாளாக அனுஷ்டித்தனர். கறுப்புக் கொடி தூக்கினர். ஐ. தே. க. ஆட்சிக்கு வந்தது; அக்கட்சியின், கணவன் மனைவி உறவு பெற்றதாகக் கூறினர். அக்காலங்களில் சுதந்திர தினத்தில் கறுப்புக் கொடி தூக்கவில்லை. அதைப்பற்றிப் பேச்சே இல்லை. அதுமட்டுமல்லாது, சுதந்திர தின வைபவங்களில் அமைச்சர்களுடன் சேர்ந்து கலந்து கொண்டாடினர். சோல்பரி அரசியல் திட்டம் மாறவுமில்லை—அவர்கள் கேட்கும் உரிமை கிட்டவுமில்லை; ஆனால் சுதந்திரதினம் பகிஷ்காரம் செய்தவர்களே, கொண்டாடி மகிழ்ந்தனர். ஐ. தே. கட்சியைவிட்டு வெளியேறிய பிற்பாடு ஒரு சுதந்திர தினம் வந்தது. அரசியல் தெரிந்தோர் அவதானமாகக் கவனித்தனர். ''கொண்டாடுவதுமில்லை. பகிஷ்காரமுமில்லை'' என்றார்கள். ஆச்சரியமான அரசியல் நோக்கு;— அற்புதமான கொள்கையாளர்கள்.... உலகம் கைகொட்டிச் சிரித்தது; அரசியல் குழந்தைகளைப் பார்த்து....!

29-வது சரத்து பாதுகாப்பளித்தது என்கிறார்கள். அந்த சரத்து உள்ள போதுதானே, 'சிங்களம் மட்டும் மசோதா' கொண்டுவரப்பட்டது. அப்படி அச்சட்டம் பாதுகாப்பளிப்பதாயின், இதனைச் சட்டமாக்காது தடுத்திருக்கலாமே! கோடீஸ்வரன் வழக்கை உதாரணம் காட்டுகின்றார்கள். அவ்வழக்கின் பின்பு நடந்தமையை உலகமறியும். ஆகவே... இப்போது பகிஷ்கரிப்பது, கறுப்புக் கொடி தூக்குவது—அதே குடியரசில் உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் எடுப்பது... அதற்கு அவர்கள் கூறும் காரணம் இன்னும் வேடிக்கையானதாகும். கொல்வினும், கெனமனும் முன்பு தாம் எதிர்த்த ஆட்சியில் சத்தியப் பிரமாணம் எடுத்தார்களாம். அவர்களது வழியில் உதாரணம் காட்டுபவர்கள், அவர்களது முற்போக்கு வழியையும், கொஞ்சம் பின்பற்றலாமே! ஐந்துஆண்டுகள், பாராளுமன்ற உறுப்பினராயிருக்க தங்களுக்கு மக்களதிகாரம் தந்துள்ளனராம், பாராளுமன்ற உறுப்பினராயிருக்கவா? குடியரசு மன்ற உறுப்பினராயிருக்கவா அதிகாரம் தந்துள்ளனர்? பதவிக்காக எத்துணை சால்சாப்புகள் கூறி ஒட்டிக்கொள்கின்றனர்.

நீதி மன்றத்தில் தமிழன் தமிழில் கருமமாற்றலாம்—ஆங்கிலமே இருக்க வேண்டு மென்பவர்களுக்கு இச் சட்டம் பாதகமானதாகத்தானமையும்.

நல்லதை, நியாயமானதை, முற்போக்கானதை வரவேற்றும், சிறுபான்மை மக்களுக்கு இன்னும் போதாத உரிமைகளைச் சூட்டியும் ஆட்சியைக் கேட்பதே நியாயம். அதை விடுத்து ஒரேயடியாக முழுவதையும் வேண்டாமென்பது தேசீயப் பற்றற்ற — தாயகப் பற்றற்ற — அரசியல் விளையாட்டுக் காரரின் சுயநலவாதமாகும்.

சிறுபான்மையின மக்களுக்குப் பூரணத்துவமான சரத்துக்கள் கொண்டு அமைந்து, எல்லா உரிமைகளும் இடைத்துவிட்டன. என நாம் கூறவில்லை. முற்போக்கான அநேக திட்டங்களைக் கொண்டமைந்ததும், ஆதரவுக்கரம் நீட்டி பூரண உரிமைகளைப் பெற முடிந்ததுமாகும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. எதிர்த்து எதிர்த்து பாராளுமன்ற உறுப்பினராகி விடுதல் அரசியல் என நாம் நம்பவில்லை முற்போக்கான கொள்கைக்கு இலங்கை மக்கள் வரும் நாள் ஒன்றுண்டு. அன்று இனப்பிரச்சனை என்ற ஒன்றே இல்லாது போய்விடும். அந்தப் பாதைக்கு, குடியரசுச் சட்டங்கள் பாதை காட்டுகின்றது, அப்பாதையில் சகோதரத்துவம் மிளிர கைகோத்துச் சென்றால் ...... .... விரைவில் எல்லாம் கொண்டு வாழும், புதிய சமுதாயம் காணலாம். குடிமைநீதியைச் சந்திக்கலாம். அக் குடியரசைக் காண இக் குடியரசை வரவேற்போம்; 'அன்பு' உலகாள எமது அன்புள்ளத்தையும் பிணைத்துக்கொள்வோம்.

# புதிய அரசியல் அமைப்பும் தமிழரும்

நம் நாடு இன்று புதிய நுழைவாயிலை அணுகுகிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து முற்றாக விலகி தன்னுதிக்கமுள்ள பூரண இறைமையுள்ள சுதந்திர குடியரசாக மாறுகின்றது.

இவ் வேளையில் தமிழ் பேசும் மக்களாகிய நாமும் இக் குடியரசு தினத்தில் மகிழ்ச்சி கொள்ளாது இருக்க முடியாது. நம் நாட்டின் பிரச்சனைகளை சகோதர மக்களாகிய நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும். இந்தியா, பாகிஸ்தான் பிரச்சனை எப்படி மூன்றும் ஆள் உதவியில்லாது தீர்க்கப்பட உள்ளதோ அதே போல் நாமும் மூன்றும் ஆளிற்கு இடமளிக்கக்கூடாது.

நம் நாட்டில் வாழும் சகல மக்களுக்கும் பொதுவான பல பிரச்சனைகள் உண்டு. இவற்றை நாம் தீர்த்தாக வேண்டும். உதாரணமாக வேலையில்லா திண்டாட்டம், பொருளாதாரப் பிரச்சனை போன்றவை நாட்டின் எதிர்காலத்தையே பாதிப்பதாக உள்ளன. எனவே நாம் இவற்றை தேச ஒற்றுமையோடு தீர்க்க சபதமெடுக்க வேண்டும், பொருளாதாரம் அதனுல் ஏற்படும் சுபீட்ச வாழ்வு சகல மக்களுக்கும் பொதுவானது எனவே தேசிய ஒற்றுமைகட்டி எழுப்பப்படவேண்டும்.

மேடையேறி ஒற்றுமையை வலியுறுத்துவதால், ஒற்றுமை ஏற்பட்டுவிடாது அது மட்டுமல்லாமல் நாட்டின் ஒற்றுமை அரசியல் வாதிகளின் கையில் தங்கியிருக்கும் நிலையை ஏற்படுத்தக் கூடாது. நம் நாட்டில் வாழும் மாணவர்கள், அறிஞர்கள், விஞ்ஞானிகள், கலைஞர்கள் போன்ருேரால் தான் தேசிய ஐக்கியத்தை வளர்க்கமுடியும்.

இன்று நம் முன் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள அரசியல் அமைப்பு தமிழ் பேசும் மக்களின் முழு உரிமைகளையும் தராது விட்டாலும் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை அரசாங்கம் உணர்ந்துள்ளது என்பது தெளிவாகின்றது. அது மட்டுமல்லாது கிடைத்த உரிமைகளில் சில முன்னைப் பொழுதையும் விட முன்னேற்றமாககிடைத்துள்ளது. என்பதும் மறுப்பதற்கில்லை. மலை நாட்டுத் தமிழ் மக்களின் நிலை தெளிவற்றிருப்பினும் இந்நிலை நாட்டின் நல்லெண்ண சூழ்நிலையில் தான் எப்பிரச்சனையும் தீர்க்கமுடியும் என்பதை எடுத்து காட்டுகிறது. இதற்கான செயல்திறன் தமிழ் மக்களைப்பொறுத்தவரையில் முக்கியத்துவம் வாய்ந்தது. எனவே அதற்கானபணியில் நாம் இறங்க வேண்டும்.

சிறுபான்மை இனங்களின் பாதுகாப்பு, பெரும்பான்மை இனத்தின் நல்லெண்ணம், ஒற்றுமை உணர்ச்சி, முற்போக்கு சக்திகளின் ஆதரவு என்பவற்றில் தான் தங்கியுள்ளது. இதைத்தான் சோஷலிஸ நாடுகள் உலகமக்களுக்குப் போதிக்கின்றன.

ஓர் அரசியல் திட்டமென்பது நிரந்தரமற்ற தென்பதை இரண்டாம் உலகப் போருக்கு முன் ஜேர்மனியில் தோன்றிய சர்வாதிகாரி ஹிட்லர் உலகத்துக்கு நிரூபித்திருக்கிருர். அரசியல்

திட்டமென்பது ஒரு நாட்டின் வாழ்வுக்கும், தாழ்வுக்கும் முழுப் பொறுப்பாயிருக்குமென்பது தவருன ஒரு கருத்தாகும். அமெரிக்க அரசியல் திட்டம் சிறந்த முறையில் எழுதப்பட்டது ஆனுல் அங்கு நீக்ரோ மக்கள், செவ்விந்தியர், போட்டோரீக்கன் மக்கள் ஆகியோர் மொழியுரிமை மட்டுமன்றி அடிப்படை மனித உரிமைகளே மறுக்கப்பட்டு வாழ்கிருர்கள். ஆட்சி மன்றங்களின் அன்னையெனக் கருதப்படும் பிரித்தானிய அரசியல் திட்டமும் ஐரிஸ் மக்களின் உரிமைகளை பாதுகாக்க தவறிவிட்டது. அது மட்டுமல்லாமல் பெரும் பான்மை வெள்ளையர்கள் கைக்கொள்ளும் புரட்டஸ்தாந்து மதத்தை அரசாங்க மதமாக்கி அரச வைபவங்களில் கொண்டாடுகிருர்கள். ஆனுல், இலங்கையில் பௌத்தமதம் பாதுகாக்கப்படுவது தவறென அபிப்பிராயப்படுகிறேம்.

எனவே தமிழ் மக்களாகிய நாம் ஒன்றை உணரவேண்டும். அரசியலில் எதுவும் முடிவானதோ, நிரந்தரமானதோ, அல்ல, செய்யும் தவறுகளால் பாடம் கற்று தவறுகளை திருத்திக்கொள்வதே முறை. அப்படியின்றி பிடிவாதம் காட்டி நாட்டில் தேசிய ஒற்றுமை ஏற்படமுடியாமற் செய்வது பெரும் தீங்காகும். எங்களுக்குள் கருத்துவேற்றுமை எவ்வளவு இருப்பினும் நாம் இரு முக்கிய சமூகத்தினரும் இந் நாட்டில் தான் சேர்ந்துவாழ வேண்டியவர்கள், நமது நன்மை தீமைகளும் தலைவிதியும் பிரிக்க முடியாது பிணைக்கப்பட்டுள்ளன.

எனவே நாம் எமது இனம் வாழ, நம் நாடு செழிக்க, ஐக்கிய இலங்கையை உருவாக்க இச் சந்தர்ப்பத்தில் சபதமெடுப்போம்.

வி. சிவலிங்கம்.
நாக சிறீ. கெங்காதரன்
—இதழாசிரியர்கள்

---

*அரசியல் அமைப்பு ஒரு சிறுபிள்ளைக்குத் தைக்கும் ஆடை போன்றது. பிள்ளை வளர, வளர ஆடையையும் மாற்ற வேண்டியது தான். அதேபோல்தான் அரசியல் அமைப்பும் நிரந்தரமானதல்ல. காலத்தோடு ஒட்டியவாறு மாற்றவேண்டும்.*

— வ. பொ.

*அரசாங்கத்தின் முற்போக்கான சகல நடவடிக்கைகளையும் ஆதரிக்கும் அதேநேரத்தில் எமக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதிகளை நாம் ஒன்றுபட்ட முயற்சி மூலம் தீர்த்துவைக்க முயல்வோமாக. காலங்கள் பல நீடித்தாலும், சாத்விகமான போக்கில் இதை நாம் செய்யவேண்டும்.*

— ஓய்வுபெற்ற நீதியரசர்: வி. மாணிக்கவாசகர்.

# என்றும் எம் நன்றிகள்!

* விளம்பரங்கள் தந்துதவிய: — அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கும்
  — பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும்
  — வர்த்தக ஸ்தாபனங்களுக்கும்
* வாழ்த்துரைகள், கட்டுரைகள், கவிதைகள் தந்துதவிய பெரியோர்களுக்கும் கலைஞர்களுக்கும்
* காரியாதிகாரி, கல்வி அதிகாரி, மகாஜனக் கல்லூரி அதிபர் ஆகியோருக்கும்
* போட்டிகளில் பங்குபற்றிய மாணவ வீரர்களுக்கும், பாடசாலை அதிபர்களுக்கும்
* பரிசில்கள் வழங்கிய பெரியார்களுக்கும்
* விழாவின் வெற்றிக்கு பொருளுதவி புரிந்தவர்களுக்கும்
* மலர் வெளியிடத் துணைநின்ற தோழர் புதுமைலோலனுக்கும்
* யாழ் — ஆனந்தா அச்சக அதிபருக்கும். தொழிலாள நண்பர்களுக்கும்
* விழாவில் பங்குபற்றிய அனைவருக்கும்

---

*" குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு*
*மேன்மையுறக் குடிமை நீதி*
*கடிதென்று எழுந்தது பார்—குடியரசென்று*
*உலகறியக் கூறிவிட்டார்*
*அடிமைத் தளையில்லை—இனியாரும்*
*அடிமையில்லை—அறிக என்றார்*
*இடிபட்ட சுவர்போல கலி விழுந்தான்*
*கிருத யுகம் எழுக மாதோ."*

—மகாகவி பாரதி

---

ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.


50
1965
02 F 0363
ஐம்பது
சதத்தின்
ஆற்றல்
அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பர்.
அது போலத் தான் ஒரு சுவீப் டிக்கெட்டுக்கு நீங்கள்
கொடுக்கும் ஐம்பது சதத்தின் ஆற்றலும், உங்களில்
பல்லாயிரக் கணக்கானோர் கொடுக்கும் ஐம்பது ஐம்பது
சதங்கள் திரண்டு அரும் பெரும் பரிசுகளாகவும் தேசிய
அபிவிருத்திக்கு வேண்டிய மூலதனமாகவும் உங்களுக்கே
திரும்பவும் பயன் தருகின்றன.
ஆகவே தான் நீங்கள் தேசிய லொத்தர் சபையின் சுவீப்பில்
வென்றாலும் தோற்றாலும்
வெற்றி உங்களுக்கே !
NATIONAL LOTTERIES
தேசிய லொத்தர் சபை

தமிழ்பேசும் மக்களின் உன்னத
நல்வாழ்வை விரும்பும்

# லீலா பஞ்சாங்க
# சித்திரக் கலண்டர்

தயாரிப்பாளர்கள்.

பதிப்பு:
**நியூலீலா அச்சகம்**
33, சென். செபஸ்தியன் மேடு
கொழும்பு.
தொலைபேசி: 25930

விநியோகஸ்தர்கள்:
**லீலா ஸ்ரோர்ஸ்**
249, ஒல்கொட் மாவத்தை
புறக்கோட்டை, கொழும்பு—11.
தொலைபேசி: 25929

KANKESAN

RUHUNU

&

TAMMANNA

Play a vital role

in

Building for the future

of

LANKA

Ceylon Cement Corporation
Independence Square
Colombo, 7.